Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 1






35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 06 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 15, 2025

# டக் ஃபோர்ட் மூன்றாம் முறையாக பெரும்பான்மை வெற்றி!

ஒன்றாறியோ மாகாணத்தில் 2025 பெப்ரவரி 27ஆம் திகதி நடைபெற்ற 44ஆவது ஒன்றாறியோ மாகாண சட்டசபைக்கான பொதுத்தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வென்று ஒன்றாறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் ஆற்றிய தேர்தல் வெற்றியுரையில், தான் ஒவ்வொரு நாளும் காலையில் எழும்பும்போது "நான் இதற்கு முன்பு போராடாததுபோல் இன்று போராடுவேன்" என நினைத்துக் கொண்டு எழும்புவதாகக் கூறினார்.

அவர் தனது உரையில் ஒன்றாறியோவின் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்த முயற்சிப்பதாகவும், ஒன்றாறியோவின் வடக்கில், 'நெருப்பு வளையம்' என்று அழைக்கப்படும் கனிமவளம் நிறைந்த பகுதியில் சுரங்கத் தொழிலை மேம்படுத்தப் போவதாகவும் கூறினார். மேலும் கூறுகையில், "டொனால்ட் டிரம்ப் எங்களை உடைக்க முடியும் என நினைக்கிறார். அவர் எங்களைப் பிரதேச வாரியாகப் பிரித்து மோதவிட்டு தான் வெல்லலாம் என நினைக்கிறார். எங்களுக்கு என்ன தெரியும் என்று அவருக்குத் தெரியவில்லை. அவர் எம்மைக் குறைத்து மதிப்பிடுகிறார். கனடிய மக்களின் மன உறுதியை, ஒற்றுமையை அவருக்குத் தெரியவில்லை. அமெரிக்காவுடன் கனடா ஒருபோதும் சண்டையைத் தொடங்காது. ஆனால், அவ்வாறு ஒன்று வந்தால், அதை வெல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம் என நீங்கள் நன்றாக நம்பலாம்" என்றார்.

அத்துடன் அமெரிக்காவுடனான வர்த்தகப் போரின் விளைவுகளிலிருந்து ஒன்றாறியோவைக் காக்க தன்னுடன் ஒத்துழைத்து வேலை செய்ய வருபவர்கள் எல்லோருடனும் இணைந்து பணியாற்ற தான் தயாராக இருப்பதாகவும், அமெரிக்காவின் சுங்கவரியால் பாதிக்கப்படும் தனிநபர்கள் மற்றும் வணிக நிறுவனங்களை ஆதரிக்க தான் தயங்க மாட்டேன் எனவும் டக் ஃபோர்ட் தனது தேர்தல் வெற்றியுரையில் கூறினார்.

தேர்தல் வாக்களிப்புகள் முடிந்து வாக்குகள் எண்ணத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே ஊடகங்கள் டக் ஃபோர்ட் தலைமையிலான ஒன்றாறியோவின் முற்போக்கு பழமைவாதக்கட்சி ஒன்றாறியோவில் மூன்றாவது முறையாகப் பெரும்பான்மை அரசை அமைக்கப் போகிறது எனத் தெரிவித்தன. எந்தக் கட்சி இரண்டாவது அதிகப்படியான ஆசனங்களைப் பெற்று உத்தியோகப்பூர்வமான எதிர்க்கட்சியாக மாகாண சட்டசபையில் வரும் என்பதைத் தீர்மானிக்கவே சற்று


Doug Ford at his Progressive Conservative election night party — Thanks: Carlos Osorio/Reuters

நேரம் எடுத்தது. மக்களின் அதிகமான விருப்புவாக்குகளைப் பெற்றும் லிபரல் கட்சியால் விருப்புவாக்குகள் குறைவாகப் பெற்ற புதிய ஜனநாயகக் கட்சியை விட அதிக ஆசனங்கள் பெறமுடியாமல் போய் விட்டது. இதனால், புதிய ஜனநாயகக் கட்சியே மாகாண சட்டசபையில் மீண்டும் உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியாகிறது.

## 2025 ஒன்றாறியோ மாகாணப் பொதுத்தேர்தல் முடிவுகள்

| கட்சி | ஆசனங்கள் | வாக்குகள் | % |
|---|---|---|---|
| பழமைவாதக் கட்சி | 80 | 2,158,452 | 42.97 |
| புதிய ஜனநாயக கட்சி | 27 | 931,796 | 18.55 |
| லிபரல்கட்சி | 14 | 1,504,688 | 29.95 |
| பசுமைக்கட்சி | 2 | 242,822 | 4.83 |
| சுயேட்சை உறுப்பினர் | 1 | 54,278 | 1.10 |
| மொத்தம் | 124 | | |

ஒன்றாறியோ தேர்தல் திணைக்களத்தின் அறிக்கையின்படி 11.1 மில்லியன் பதிவு செய்யப்பட்ட ஒன்றாறியோ மாகாண வாக்காளர்களில் 5 மில்லியன் பேர் இம்முறை தேர்தலில் வாக்களித்திருந்தனர். இது 45.4% வாக்காளர்களாகும்.

ஒன்றாறியோ மாகாண வரலாற்றில் அதி குறைந்த வாக்காளர்கள் அதாவது 44% ஆனோர் வாக்களித்திருந்தது 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்றாறியோ மாகாணப் பொதுத்தேர்தலில் ஆகும். ஒன்றாறியோ மாகாணத்தில் வழமையாக 51%இல் இருந்து 64% மக்கள் பொதுத் தேர்தலில் வாக்களிப்பர்.

**Mississauga-Erin Mills** தொகுதியில் பழமைவாதக்கட்சி வேட்பாளர் 20 அதிகப் படியான வாக்குகளால் வென்றுள்ளார்.

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
|---|---|---|---|
| பழமை வாதக்கட்சி | Sheref Sabawy | 16,665 | 44.3 |
| லிபரல்கட்சி | Qasir Dar | 16,645 | 44.2 |
| புதிய ஜனநாய கக்கட்சி | Mubashir Rizvi | 2,087 | 5.5 |

**Mushkegowuk-James Bay** தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் 8 அதிகப்படியான வாக்குகளால் வென்றுள்ளார்.

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
|---|---|---|---|
| புதிய ஜனநாய கக்கட்சி | Guy Bourgouin | 3,610 | 45.4 |
| பழமை வாதக்கட்சி | Dave Plourde | 3,602 | 45.3 |
| லிபரல்கட்சி | Kyle Allen | 613 | 7.7 |

இவ்விரண்டு தொகுதியிலும் வெற்றி பெற்றவர் 25 வாக்குகளுக்குக் குறைவான எண்ணிக்கையான அதிகப்படியான வாக்குகளைப் பெற்றபடியால் ஒன்றாறியோ தேர்தல் விதிகளுக்கு அமைய வாக்குகள் திரும்ப எண்ணப்பட்ட பின்னரே அத்தொகுதிகளில் யார் வெற்றி பெற்றவர் என உறுதி செய்யப்படும். இத்தொகுதிகளில் வாக்குகளை மீள எண்ணும் நாளாக மார்ச் 17ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**Kingston and The Islands** தொகுதியில் வென்ற லிபரல் கட்சியின் வேட்பாளரான Ted Hsu என்பவரே ஒன்றாறியோ மாகாணத்தில் அதிகூடிய வாக்குகளால் வென்றவர் ஆவார். இவர் 21,266 அதிகப் படியான வாக்குகளால் பழமைவாதக்கட்சி வேட்பாளரை வென்றுள்ளார்.

**Mississauga East-Cooksville** தொகுதியில் போட்டியிட்ட லிபரல் கட்சியின் தலைவர் Bonnie Crombie 1,227 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளார்.

## தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்ட தேர்தல் தொகுதிகளின் முடிவுகள்

### Markham-Thornhill

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
|---|---|---|---|
| பழமை வாதக்கட்சி | Logan Kanapathi | 14,287 | 53.6 |
| லிபரல்கட்சி | Nirmala Armstrong | 10,580 | 39.7 |
| புதிய ஜனநாய கக்கட்சி | Paul Sahbaz | 1,176 | 4.4 |
| பசுமைக் கட்சி | Shane O'Brien | 623 | 2.3 |








பழமைவாதக்கட்சியைச் சேர்ந்த லோகன் கணபதி 3,716 அதிகப்படியான வாக்குகளால் வென்றுள்ளார்.

### Scarborough-Rouge Park

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
|---|---|---|---|
| பழமைவாதக் கட்சி | Vijay Thanigasalam | 16,357 | 49.2 |
| லிபரல்கட்சி | Morris Beckford | 13,385 | 40.2 |
| புதிய ஜனநாய கக்கட்சி | Hibah Sidat | 2,360 | 7.1 |
| பசுமைக் கட்சி | Victoria Jewat | 727 | 2.2 |
| NOTA ஜன நாயகக்கட்சி | Timothy James | 326 | 1.0 |
| கம்யூனிஸ்ட் கட்சி | Wai Kiat Tang | 114 | 0.3 |

பழமைவாதக்கட்சியைச் சேர்ந்த விஜய் தணிகாசலம் 2,972 அதிகப்படியான வாக்குகளால் வென்றுள்ளார்.

**Scarborough-Guildwood** தொகுதியில் பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜுட் அலோசியஸ் 10,731 (37,9%) வாக்குகளைப் பெற்று 2,972

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separat Entrance

Morningside / Finch

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Rent

1 BR. Northyork
Tridel Building

Laminated
Floor $1850

Vivek Dani *
Call : 416 627 5721

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale

GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking

$279k

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Rent

2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / HWY401

Tridel Building

Deepak Dani **
Call : 416 930 9733

## For Rent

Town House for Rent

3 Level 3BR + 1 BR

3 Wash Rooms
Keele / Downsview

Kumar Sinnathamby*
Call : 416 576 4357

To
Join
HomeLife/GTA
Realty Inc.
Call at
416 321 6969

One of the Best
Brokerage in East Toronto.

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph *
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தப்பித்து நழுவும் பெரிய மீன்கள்

**– அரவின் –**

அண்மையில் மீரிகமவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இறக்குமதி செய்த, 30 சிசிடிவிக் கருவிகளை வரியின்றி விடுவிப்பதற்கு, தபால் திணைக்களத்தின் ஊழியர் ஒருவர் 11,000 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவருக்கு 28 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில், அவருக்கு தலா 7 ஆண்டுகள்வீதம், அந்தத் தண்டனையை ஒரேநேரத்தில் அனுபவிக்க வேண்டும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் தீர்ப்பளித்து இருக்கிறார். இந்தச் சம்பவம் இலங்கையின் நீதித்துறை மிகவும் இறுக்கமானதாக, நேர்மையானதாக இயங்குகிறது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கையில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்களா? நிச்சயமாக எல்லோரும் இல்லை. தண்டனையில் இருந்து தப்பிக்கின்ற கலாசாரம் இலங்கையில் மிகுதியாக உள்ளது.

அது தனியே போருடன் சம்பந்தப்பட்ட குற்றங்கள் மாத்திரமன்றி, இலஞ்சம், ஊழல், மோசடி என ஏனைய குற்றங்களுக்கும் அவ்வாறான நிலையே காணப்படுகிறது.

அனுரகுமார திசநாயக்க ஆட்சிக்கு வந்தபோது, பெரியளவிலான எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் காணப்பட்டது.

அதன்விளைவாகவே, அவரது தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அடுத்த சில மாதங்களில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், மிகப்பெரிய அளவிலான வெற்றி ஒன்றைப் பதிவு செய்ய முடிந்தது.

ஆனால், மக்களின் அந்த நம்பிக்கை எதிர்பார்ப்பு நிறைவேறியதா? என்றால், அதற்கான பதில் இல்லை என்பதே ஆகும்.

சின்ன மீன்கள் மாத்திரம் சிக்குகின்றன. பெரிய மீன்கள் தப்பித்துக் கொள்கின்றன என்ற குற்றச்சாட்டு இப்போது பரவலாக முன்வைக்கப்படுகிறது.

சின்னச்சின்னக் குற்றங்களைச் செய்தோர் அல்லது சிறிய அளவிலான ஊழல், மோசடி போன்றவற்றில் ஈடுபட்டோர் கைது செய்யப்படுகின்றனர். சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

சிலர் தண்டிக்கப்படுகின்றனர். பலர், சில நாட்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப் படுகின்றனர். பின்னர் அந்த வழக்குகள் என்னவாகும் என்று யாருக்கும் தெரியாது.

சிசிடிவிக் கருவிகளை விடுவிப்பதற்கு 11 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய ஊழியரைப்போல உள்ளவர்கள் மாத்திரம், மிக நீண்டகால சிறைத்தண்டனைக்கு உள்ளாகின்றனர்.

இவர்களால் தப்பிக்க முடியவில்லை. அல்லது தப்பிக்கின்ற வழி தெரியவில்லை. அதனால் அவர்கள் மாட்டிக் கொள்கின்றனர்.

இவர்களை மாட்டிவிட்டு இவர்களின் பக்கம் கவனத்தைத் திருப்பிவிட்டு, பெரும் முதலைகள் தப்பித்துக் கொள்கின்றனர்.

குற்றம் இழைத்தோர் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டனையின்றித் தப்பிப்பது தவறான முன்னுதாரணம்.

11 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் வாங்கியதும் குற்றம்தான். அதை யாரும் நியாயப்படுத்த முடியாது.

ஆனால் இவ்வளவு தொகை இலஞ்சத்தை வாங்கிய ஒருவருக்கு 28 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்ற போதும், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்கள், இன்னமும் கைது செய்யப்படாமல் இருக்கின்றனர். அது எப்படி?

ராஜபக்சவினர் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாக்களைக் கொள்ளையடித்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டை கூறியவர்களின் தேசிய மக்கள் சக்தியினரும் அடங்கி இருந்தனர்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதா அல்லது ராஜபக்சவினரைக் கைது செய்து விசாரிக்கின்ற நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா? இல்லை.

கடந்த காலங்களிலும் பெரும் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை சிறையில் அடைப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் யாருமே, தமது வாக்குறுதியை நிறைவேற்றியதில்லை.

ராஜபக்சவினரை சிறையில் அடைக்கப் போவதாகக் கூறிய மைத்திரி, ரணில் அரசும் அதனைச் செய்யாமல் அவர்களைப் பாதுகாத்தது.

ரணில் விக்கிரமசிங்கவை சிறையில் அடைக்கப் போவதாகக் கூறிய ராஜபக்சவினரும் அதனைச் செய்யவில்லை.

இவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அனுரகுமார திசநாயக்கவும் அதனைச் செய்யப் போவதில்லை.

இலங்கை மத்திய வங்கியில் ஆளுநராக, சிங்கப்பூர் குடிமகனான, அர்ஜுன மகேந்திரனைக் கொண்டு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி பிணை முறி விற்பனையில் மோசடி செய்து, 15000 கோடி ரூபாய்க்குமேல் ஆதாயம் பெற்றதாகக் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

இது தொடர்பான விசாரணைகளுக்கான அவரை இலங்கைக்குக் கொண்டுவரும் வகையில், சிங்கப்பூர் அரசாங்கத்திடம், நாடு கடத்துமாறு கோரிக்கை விடுக்கப் பட்டது. ஆனால் சிங்கப்பூர் அரசாங்கம் அதனை மறுத்துவிட்டதாகக் கூறுகிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், தேர்தல் பிரச்சாரங்களில் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக் கொண்டு வருவோம் என வாக்குறுதி கொடுத்தது.

ஆனால், இப்பொழுது சிங்கப்பூர் அரசாங்கம் அவரை அனுப்ப மறுக்கிறது, நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கை விரிக்கிறது.

இந்த அரசாங்கம் தனது பதவிக்காலத்தை இன்னும் நான்கரை ஆண்டுகளில் நிறைவு செய்கின்ற போதும், இதேபோலத்தான் பெரும்பாலான வாக்குறுதிகளுக்கு எங்களால் என்ன செய்ய முடியும் என கைவிரிக்கப் போகிறது போலவே தெரிகிறது.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முளை கட்டி வளரும் நிலையில், இருக்கிறது. அது வீரியமுள்ள பயிராக விளையக்கூடிய பயிராக இப்போது தென்படவில்லை. ஏனென்றால், அவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, ஏனைய அரசாங்கங்கள் மக்களை எப்படி ஏமாற்றினவோ, அதுபோலவே ஏமாற்றுவதற்கு முற்படுகின்றனர். அரசாங்கத்தில் அங்கம் வகித்த, அரசாங்கத்துடன் நெருங்கிப் பழகிய, கோடிக்கணக்கான ரூபாய் பணத்தையும் நிலங்களையும் பிற சொத்துக்களையும் அபகரித்த, மோசடி செய்தவர்கள், யாருமே இப்போது விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்படவில்லை.

கொள்ளையடித்தவர்களைக் கண்டுபிடிப்போம், சிறையில் அடைப்போம், நீதியின் முன் நிறுத்துவோம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்த தேசிய மக்கள் சக்திக்கு, இப்பொழுது அது நினைவிருக்கிறதோ தெரியவில்லை. ஆனால், அவையெல்லாம் வெறும் வாக்குறுதிகளாக மாத்திரம் இன்றுவரை இருக்கின்றன.

சின்ன சின்ன மீன்கள் பிடிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் அவற்றின் மீது கவனம் செலுத்துகின்றபோது, பெரிய மீன்கள் தப்பி விடுகின்றன.

இலங்கையில் இப்போது அதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டும், சரணடையாமல் இருக்கிறார்.

அவருக்கும் முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அதனால், அனுரகுமார திசநாயக்க அரசாங்கம், முன்னாள் பொலிஸ் மா அதிபரைக் கைது செய்யாமல் இருக்கிறது என்று குற்றம் சாட்டியிருக்கிறார் சம்பிக்க ரணவக்க.

அதுபோல, அர்ஜுனன் மகேந்திரனை அவர் கைது செய்யமாட்டார், ஏனென்றால் அவர்களுக்குள் ஓர் உடன்பாடு இருக்கிறது என்றும் அவர் குற்றம்சாட்டி இருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறதோ இல்லையோ தெரியாது.

ஆனால் அரசாங்கம் வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றபோது, அதனை நிறைவேற்றத் தவறுகின்றபோது, இப்படிப்பட்ட சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள் எல்லாம் வருவது இயல்பானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது அர்ப்பணிப்பை நிறைவேற்றாமல் போனால் இத்தகைய குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க முடியாது.

**பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள். ஏனென்றால் பொய் வாழவிடாது. உண்மை சாகவிடாது.**

- விவேகானந்தர்

விளம்பரம் VLAMBARAM™

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கனடிய லிபரல்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வாக்குகள் வித்தியாசத்தில் அங்கு போட்டியிட்ட லிபரல் கட்சி வேட்பாளர் Andrea Hazellஇடம் தோல்வி அடைந்தார்.

Scarborough North தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அனிதா ஆனந்தராஜன் 8,316 (34.7%) வாக்குகளைப் பெற்று 4,381 வாக்குகள் வித்தியாசத்தில் அங்குப் போட்டியிட்ட பழமைவாதக்கட்சி வேட்பாளர் Raymond Cho இடம் தோல்வி அடைந்தார். இதே தொகுதியில் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட தட்ஷா நவநீதன் 2,496 (10.4%) வாக்குகளைப் பெற்று இத் தொகுதியில் மூன்றாம் இடத்திற்கு வந்துள்ளார்.

ஜுன் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்றாறியோ மாகாணப் பொதுத் தேர்தலுடன் இம்முறை நடைபெற்ற தேர்தலை ஒப்பிட்டுப் பார்த்தால் இம்முறை வாக்களித்தவர்களின் தொகை 1.4% அதிகம் என மேலே பார்த்தோம்.



Newly re-elected Ontario Premier Doug Ford    Thanks: The Canadian Press / Laura Proctor

பழமைவாதக்கட்சி 2022இல் 83 ஆசனங்களைப் பெற்றிருந்தது. அது 2025இல் 80 ஆசனங்களையே பெற்றது. ஆனால், அது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை இம்முறை 2.14%ஆல் அதிகரித்திருந்தது.

லிபரல் கட்சி 2022இல் 8 ஆசனங்களைப் பெற்று ஒன்றாறியோவில் உத்தியோக பூர்வமான கட்சி என்ற தகைமையை இழந்திருந்தது. அது 2025இல் 14 ஆசனங்களைப் பெற்று ஒன்றாறியோவின் உத்தியோகபூர்வமான கட்சி என்ற தகைமையைப் பெற்றுள்ளது. அத்துடன் அது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை இம்முறை 6.10%ஆல் அதிகரித்திருந்தது.

புதிய ஜனநாயகக்கட்சி 2022இல் 31 ஆசனங்களைப் பெற்று மாகாண சட்டசபையில் உத்தியோகபூர்வமான எதிர்க் கட்சி என்ற தகைமையைப் பெற்றிருந்தது. அது 2025இல் 27 ஆசனங்களைப் பெற்று மீண்டும் மாகாண சட்டசபையில் உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை இம்முறை 5.19%ஆல் குறைந்திருந்தது.

பசுமைக்கட்சி 2022இல் 1 ஆசனத்தை மட்டுமே பெற்றது. அது 2025இல் 2 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆனாலும், அது பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை



Ontario NDP Leader Marit Stiles, Ontario PC Party Leader Doug Ford, Ontario Liberal Party Leader Bonnie Crombie and Ontario Green Party Leader Mike Schreiner
Thanks: The Canadian Press/Chris Young

இம்முறை 1.13%ஆல் குறைந்திருந்தது. அடுத்தடுத்து மூன்று பொதுத்தேர்தல்களில் வென்று பெரும்பான்மை அரசைப் பெற்று டக் ஃபோர்ட் சாதனை செய்துள்ளார். இதற்கு முன்னர் 1951ஆம் ஆண்டில் ஒன்றாறியோ மாகாண முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட Leslie Frost




Doug Ford greets workers during a campaign event    Thanks: The Canadian Press / Dax Melmer

அடுத்தடுத்து மூன்று பொதுத் தேர்தல்களில் வென்று பெரும்பான்மை அரசை அமைத்திருந்தார். 1971ஆம் ஆண்டில் ஒன்றாறியோ மாகாண முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட Bill Davis அடுத்தடுத்து நான்கு பொதுத் தேர்தல்களில் வென்று அரசு அமைத்திருந்தாலும் அதில் இரண்டுமுறை மட்டுமே அவரால் பெரும்பான்மை அரசு அமைக்கக்கூடியதாக இருந்தது.

ஒன்றாறியோ மாகாண அரசியலமைப்புச் சட்டப்படி ஒன்றாறியோ மாகாணப் பொதுத்தேர்தல் ஒன்று நடந்து நான்கு வருடங்களின் பிறகு வரும் ஜுன் மாதத்தின் முதலாவது வியாழக்கிழமை அடுத்த பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஒன்றாறியோ மாகாணத்தில் கடந்த பொதுத்தேர்தல் நடைபெற்றது 2022 ஜுன் 2ஆம் திகதியாகும். இதனால், அடுத்த பொதுத்தேர்தல் 2026 ஜுன் 4ஆம் திகதி நடைபெற வேண்டும். ஆனால், ஒன்றாறியோ முதல்வர் டக் ஃபோர்ட் 2025 ஜனவரியில் பதவியேற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% மேலதிக சுங்கவரி விதிக்கப் போவதாக கூறிவருவதைக் காரணம் காட்டி அமெரிக்க அரசுடன் பேரம் பேசி ஒன்றாறியோ மாகாணத் தொழிலாளர்களின் வேலையைப் பாதுகாக்க தனக்கு மீண்டும் ஒன்றாறியோ மக்களின் ஆணையும், பெரும்பான்மை அரசும் தேவை எனக்கூறி பொதுத் தேர்தலை நடைபெற வேண்டிய காலத்துக்கு 15 மாதங்களுக்கு முன்னர் நடத்தினார்.

ஒன்றாறியோ மாகாணத்தில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த $189 மில்லியன் செலவாகும். எதிர்க்கட்சிகள் டக் ஃபோர்ட் தேவையில்லாமல் 15 மாதங்களுக்கு முன்னர் மாகாண சட்டசபையைக் கலைத்து வரியிறுப்பாளர்களது பணத்தில் $189 மில்லியனை வீணாகச் செலவு செய்து இத்தேர்தலை நடத்துகிறார் எனப் பிரசாரங்கள் செய்திருந்தாலும் ஒன்றாறியோ மக்கள் மீண்டும் டக் ஃபோர்டை ஒன்றாறியோ மாகாண




Doug Ford and his wife Karla Ford
Thanks: The Canadian Press / Laura Proctor

முதல்வராக மிகப் பெரும்பான்மை ஆசனங்களுடன் தெரிவு செய்துள்ளனர்.

கனடியத் தேர்தல் முறையை 'First-Past-The-Post' எனப்படும் தற்போதைய தேர்தல் முறையிலிருந்து விகிதாசாரத் தேர்தல் முறைக்கு மாற்ற வேண்டும் எனத் தீவிரமாக பிரசாரம் செய்து வரும் 'Fair Vote Canada' என்ற நிறுவனம் தற்போது நடைபெற்ற ஒன்றாறியோ மாகாணத் தேர்தல் முடிவுகளை விமர்சித்து உள்ளது.

43%ஆன வாக்குகளைப் பெற்ற பழமைவாதக்கட்சிக்கு 55 ஆசனங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு 80 ஆசனங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றது. 30%ஆன வாக்குகளைப் பெற்ற லிபரல் கட்சிக்கு 38 ஆசனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு 14 ஆசனங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. 19%ஆன வாக்கு களைப் பெற்ற புதிய ஜனநாயகக்கட்சிக்கு 24 ஆசனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு 27 ஆசனங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இதேபோல் 5%ஆன வாக்குகளைப் பெற்ற பசுமைக்கட்சிக்கு 6 ஆசனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு 2 ஆசனங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. சுயேட்சை வேட்பாளருக்கு ஓர் ஆசனம் கிடைத்ததை ஏற்றுக் கொண்டுள்ளது.



அத்துடன் அந்த நிறுவனம் 45%ஆன வாக்களிக்கத் தகுதியானவர்களே இத் தேர்தலில் வாக்களித்திருந்தனர் என்றும் 55%ஆனோர் வாக்களிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டி பெரும்பான்மை அரசாகப் பதவியேற்கும் பழமைவாதக்கட்சி ஒன்றாறியோ மாகாணத்தில் வாக்களிக்கத் தகுதிபெற்ற 11.1 மில்லியன் வாக்காளர்களில் 20%ஆனோரின் ஆதரவை மட்டுமே பெற்றுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.



PC: Vijay Thanigasalam

இவ்வாறு விகிதாசாரத் தேர்தல் முறைக்கு மாற்றம் செய்யப்பட்டால் பெரும் பான்மை அரசை ஒரு கட்சி அமைப்பது இயலாத காரியம் என விகிதாசார முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் கூறிவருகின்றனர். ஒன்றாறியோ மாகாண சட்டசபையில் உள்ள 124 ஆசனங்களில் பெரும்பான்மையைப் பெற 63 ஆசனங்கள் தேவை. தற்போதைய தேர்தல் முறையில் 80 ஆசனங்களைப் பெற்று பெரும் பான்மை அரசை அமைக்கும் பழமைவாதக்கட்சி விகிதாசாரத் தேர்தல்முறையில் தேர்தல் நடைபெற்றிருந்தால், 55 ஆசனங்களைப் பெற்று சிறுபான்மை அரசையே அமைத்திருக்கும்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 6



# அனுர அலையில் தமிழரும் சிக்குவார்களா?

## – முகிலன் –

உள்ளூராட்சித் தேர்தல் நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர், நடக்கப் போகிறது. மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரை 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும், அதன்பின்னரே, தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுபட்டு நின்றதால் வடக்கில் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட இடங்கள்கூட, யாரும் எதிர்பாராதவகையில், தேசிய மக்கள் சக்தியிடம் வீழ்ச்சி கண்டது.

முன்னொருபோதும் இல்லாத வகையில், இந்த மாற்றம் நிகழ்ந்தது. இது எல்லோரும் குறிப்பிடுவதுபோல, அனுர அலையின் விளைவு மாத்திரமல்ல. ஜனாதிபதித் தேர்தலில் அனுர அலை வடக்கு, கிழக்கில் வீசவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் அவருக்குக் கிடைத்த வாக்குகளைவிட, பல மடங்கு அதிகமான வாக்குகள் சஜித் பிரேமதாசவுக்கும், தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கும் கிடைத்திருந்தன. அப்படியிருக்க, பொதுத்தேர்தலில் மட்டும் எப்படி அனுர அலை வடக்கில் செல்வாக்கு செலுத்தியது எனக் கேள்வி எழுப்பலாம்.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் அனுர அலையினால், தேசிய மக்கள் சக்தி அடைந்த இலாபத்தைவிட, பொதுத் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த ஆதாயம் மிகப்பெரிது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் இருந்த பிரச்சினைகள், குழப்பங்கள் போன்றவற்றினால் தமிழ் மக்கள் வெறுப்படைந்து போனதன் விளைவுதான், தேசிய மக்கள் சக்திக்கு அந்த ஆதாயம் கிடைக்கக் காரணம்.

இதுவரை காலமும், தமிழ் தேசிய கட்சிகளின் பக்கம் நின்று கொண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினர், இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க முற்பட்டதை, ஒரு வரலாற்றுப் படிப்பினை என்று எடுத்துக்கொள்ள வேண்டும். வடக்கில் தேசிய மக்கள் சக்தி, மிகப் பெரிய வாக்கு வங்கி ஒன்றை தமிழ்த் தேசியக் கட்சிகளிடமிருந்து பறித்தெடுக்கவில்லை. தமிழ்க்கட்சிகள் பிளவுபட்டு நின்றதால், அந்தக் கட்சி மிகப்பெரிய கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டது. அதனால் அதிக ஆசனங்களையும் கைப்பற்றிக்கொண்டது.

இது முற்றுமுழுதாக தமிழ் தேசியக் கட்சிகளின் பக்கம் இருந்த தவறுகளின் விளைவு. தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டிருக்கவில்லை ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கவில்லை. தங்களுக்குள் மோதிக் கொண்டனர். தங்கள் மீது தாங்களே சேற்றை வாரி இறைத்துக் கொண்டனர். இதனால் கணிசமான மக்கள் வெறுப்படைந்து வாக்குகளை அளிக்காமல் இருந்தனர்.

பிற கட்சிகளின்மீது நம்பிக்கை கொண்டு இருந்தோரும், சந்தர்ப்பத்துக்கு ஏற்ப தீர்மானம் எடுப்போரும் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் பாய்ந்தனர். இதன்விளைவாக தமிழ் மக்களால் தேசிய மக்கள் சக்தி அங்கீகரிக்கப்பட்டுவிட்டது போல, அவர்கள் முழுமையாக அதன் பக்கம் சாய்ந்து விட்டனர் என்பது போன்ற ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது.

வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல், அதன் தொடர்ச்சியாக அமையப் போகிறதா அல்லது, முடிவுரை எழுதப் போகிறதா? என்ற கேள்வி இருக்கிறது.

அதாவது, தமிழ்த் தேசியக் கட்சிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கப் போகிறார்களா அல்லது தேசிய மக்கள் சக்தியின் பக்கம் சாயப் போகிறார்களா?

தமிழ்த் தேசியக் கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலில் படிப்பினைகளைக் கொண்டு தீர்மானங்களை எடுத்திருக்க வேண்டும். இந்தத் தேர்தலுக்கு அவர்கள் தயாராவதற்குக் குறுகியகாலமே இருந்தது. ஆனால், தேர்தல் நடக்கப் போகிறது என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று. அதற்கு அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் அத்தகைய தயார்படுத்தல்களை முன்னெடுத்து இருக்கவில்லை. வடக்கு, கிழக்கில் பல உள்ளூராட்சி சபைகளில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

எந்தவொரு பலம் வாய்ந்த கட்சியாலும், எல்லா உள்ளூராட்சி சபைகளிலும், ஒரே அளவுகோலின் அடிப்படையில், தேர்தலுக்கான கொள்கையை வகுக்க முடியாது. ஒவ்வொரு இடத்திற்கேற்ப, சூழலுக்கு ஏற்ப அவர்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேசசபை அதில் முக்கியமானது. வெலிஓயா என இப்போது கூறப்படுகின்ற, வலிந்த சிங்கள குடியேற்றங்களை உள்ளடக்கியது இது.

அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர், கணிசமான எண்ணிக்கையில் இருப்பதாலும், அந்தப் பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருப்பதாலும், வவுனியா வடக்கு பிரதேசசபை சிங்களக் கட்சிகளின் ஆதிக்கத்தில் வீழ்ச்சி அடையக்கூடிய ஆபத்து காணப்படுகிறது.

கடந்தமுறை அங்கு தமிழ்க் கட்சிகள் மல்லுக்கட்டியிருந்தாலும், பல்வேறு பிரச்சினைகளுடன் ஆட்சியை நடத்தி முடித்தன. அதன் ஆட்சியைக் கைப்பற்ற கொள்கை வேறுபாடுகளை மறந்து அங்கு சிங்களக் கட்சிகள் முனைப்புக் காட்டியிருந்தன.

வரப்போகும் தேர்தலில் சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களில் அனுர அலை வீசினால், அது தமிழ்க் கட்சிகளுக்கு பெரும் பாதகமாக அமையும். அதனால், அங்கு போட்டியைத் தவிர்ப்பதற்கே பெரும்பாலான கட்சிகள் விரும்புகின்றன. கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு விரும்புகின்றன.




ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தார். அவர் ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக யோசனைகளை முன்வைத்திருந்தார். அதன்பின்னர், அவரது கட்சி இடம்பெற்றுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும், அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறது.

அதேவேளை தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்த விடயத்தில் இன்னமும் தெளிவான நிலைப்பாட்டில் இல்லை. அவற்றுக்கும் இதே பிரச்சினை இருப்பது புரிகிறது. ஆனால் இவர்கள் எல்லோரும் எப்படி ஒன்றிணையப் போகினறனர் என்பதுதான் பிரச்சினை. இதேபோன்ற சிக்கல் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும், இருக்கிறது.

அங்கு முஸ்லிம் வாழக்கக்கூடிய, சிங்களவர் வாழக்கக்கூடிய உள்ளூராட்சி சபைகளில் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கு, தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன. ஆனால் அவற்றுக்கிடையில், தொடர்புகளை ஏற்படுத்துவதில் குழப்பங்கள் நீடிக்கிறது.

அதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலில், தனித்தனியாகப் போட்டியிட்டு கூட்டாக ஆட்சி அமைப்பதுதான் சரியான வியூகம் என்று தமிழரசுக் கட்சி 2023ஆம் ஆண்டிலேயே தீர்மானம் எடுத்தது. அந்தத் தீர்மானத்தின்படியே இன்னமும் செயற்படுகிறது. அதுபோலவே இத்தேர்தலில் தனித்துப் போட்டியிடவும் போகிறது.

அதேவேளை, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இன்னும் சில கட்சிகளை இணைத்துக்கொண்டு போட்டியிட முயற்சித்தபோதும், அது பெரும்பாலும் சாத்தியப்படவில்லை.

தமிழரசுக் கட்சி தனியே ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகிய முன்னைய பங்காளிக் கட்சிகளுடன் மாத்திரம் கூட்டு வைப்பதற்கான ஒரு முயற்சியை முன்னெடுத்தது. ஆனால் அந்தக் கட்சிகள் ஏற்கனவே, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் இணைந்துவிட்ட நிலையில், தமிழரசுக் கட்சிக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதனால் தாங்கள் தனி வழி செல்வதாக அந்தக் கட்சி அறிவித்திருக்கிறது.

ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியுடன் கூட்டு சேரும் என எதிர்பார்க்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணியும், தமிழ்த் தேசிய பசுமை தனித்தனியாகப் போட்டியிடுகின்ற நிலைப்பாட்டிற்கு வந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மட்டும், சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி மற்றும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மற்றும் சட்டத்தரணி தவராசா போன்றோரை உள்ளடக்கிய ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, கூட்டணி அமைத்துப் போட்டியிடப் போகிறது.

நடக்கப்போகும் உள்ளூராட்சித் தேர்தல், ஒரு சிக்கலான தேர்தல் முறையைக் கொண்டது. உறுப்பினர்கள் வட்டாரரீதியாக, விகிதாசாரரீதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். இளைஞர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதுதான் சரியான வியூகம் என தமிழரசுக் கட்சி கூறியிருந்தது.

அது சரியானதாக இருந்தால், இப்போதைய கூட்டணிகள் இப்படியே போட்டியிட்டு ஆட்சியமைக்கலாம்.

ஆனால் இந்தத் தேர்தலில் ஒன்றுசேர்ந்து போட்டியிட முடியாத தமிழ்த் தேசியக் கட்சிகள் எப்படி தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி அமைப்பதற்காக ஒன்று சேரப் போகின்றன?

மேயர், துணை மேயர் அல்லது தவிசாளர், துணைத் தவிசாளர் போன்ற பதவிகளைத் தீர்மானிப்பது சிக்கலை ஏற்படுத்தும்.

இதனால்தான், முன்கூட்டியே ஓர் உடன்பாட்டைச் செய்ய தமிழரசுக் கட்சி முற்பட்டது. ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

அப்படியானால், நாடாளுமன்றத் தேர்தல் பாடங்களுக்கு அமைய, தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவில்லை என்றே எடுத்துக்கொள்ள வேண்டும்.

Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 7



# இளையராஜா சிம்ஃபொனி – பண்ணைபுரம் முதல் லண்டன் வரை!

**கண்ணன்**

இசையமைப்பாளர் இளையராஜா லண்டன் 'ஈவென்டிம் அப்பல்லோ' அரங்கத்தில் மார்ச் 08 அன்று தனது 'வலியன்ட்' சிம்ஃபொனி இசையை அரங்கேற்றி உள்ளார். இளையராஜா இசைக் குறிப்புகளுக்கு றோயல் பில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ரா (Royal Philharmonic Orchestra) குழுவினர் இசை வடிவம் கொடுத்தனர். இளையராஜாவின் நீண்ட நாள் கனவு நிறைவேறியிருக்கிறது. சிம்ஃபொனி இசையமைத்த முதல் தமிழராக வரலாற்றில் கால் பதித்துள்ளார் இளையராஜா. தமிழ்நாட்டில் தேனி மாவட்டம் பண்ணைபுரம் என்ற சிறிய கிராமத்திலிருந்து செருப்பில்லாத வெறும் காலுடன் புறப்பட்டு வந்த சிறுவன், தனது 82ஆவது வயதில் லண்டன் அப்பல்லோ அரங்கில் தனது கனவுக்கு உயிர் கொடுத்துவிட்டார்.

### இளையராஜாவின் 1993 சிம்ஃபொனி ஏன் வெளியாகவில்லை?

இளையராஜா சிம்ஃபொனி இசை அமைப்பது இது முதல் முறையல்ல. கடந்த 1993ஆம் ஆண்டு இதே குழுவின ருடன் சேர்ந்து சிம்ஃபொனி ஒன்றைப் பதிவு செய்தார். அந்த சிம்ஃபொனியை இளையராஜா இசைத்தபோது, பிரிட்டிஷ் கம்போஷர் ஜோன் ஸ்கொட்தான் நடத்துநராக (conductor) இருந்தார். இவர், ரிச்சர்ட் டொனர், நோர்மன் ஜே.வார்னர், மைக் ஹாட்ஜஸ், ஹட்சன் போன்ற புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்களுடன் பணியாற்றியவர்.

சிம்ஃபொனி என்பது மேற்கத்திய பாரம் பரிய இசை வடிவம். ஆனால், அந்த சிம்ஃபொனியில் பரீட்சார்த்தமாக சில இந்திய இசைக் கருவிகளையும் இளைய ராஜா சேர்த்திருந்தார். இதனால், மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த இசை விமர்சகர்கள் அதை சிம்ஃபொனி என ஏற்றுக் கொள்ளவில்லை. மேற்கத்திய இசை வல்லுநர்களின் இந்த விமர்சனம் காரணமாக தான் இயற்றிய சிம்ஃ பொனியை வெளியிட மறுத்துவிட்டார், இளையராஜா.

இளையராஜாவின் 1993 சிம்ஃபொனி ஏன் வெளியாகவில்லை என்பது தொடர்பாக கூறும்போது, எழுத்தாளரும் கடந்த சில ஆண்டுகளாக இளையராஜாவுடன் நெருக்கமாக இருப்பவருமான ஜெய மோகன், "அந்த சிம்ஃபொனியில் இளையராஜா சேர்த்திருந்த இந்திய இசையம்சம் அதன் வெளியீட்டாளர் களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.



அதை நீக்கவேண்டும் அல்லது கலவை இசை (ஃப்யூஷன்) என்று பெயரிட வேண்டும் என்றனர். அவர்களின் பார்வையில் சிம்ஃபொனி என்பது கறாரான நெறிகள் கொண்டது, முற்றிலும் ஐரோப்பியச் செவ்வியல் சார்ந்தது. சிம்ஃபொனியில் மாபெரும் படைப்புகள் ஏற்கனவே உள்ளன. ஆனால், 'இந்திய இசையுடன் இணைந்திருப்பதுதான் தன் சிம்ஃபொனியின் தனிச்சிறப்பு. சிம்ஃபொனி அப்படி தூய மேற்கத்திய இசையாக இருக்கவேண்டும் என்பதில்லை' என்பது இளையராஜாவின் தரப்பு.

இது சிம்ஃபொனி என்ற வடிவின் அழகியல் சம்பந்தமான விவாதம். மேலை நாட்டில் இலக்கியம், இசை எல்லா வற்றிலும் 'எடிட்டர்'களின் கருத்து வலுவானது. ஆனால், தன் இசைமேல் இன்னொருவரின் கருத்தை இளையராஜா ஊடுருவலாகவே எடுத்துக்கொண்டார். விவாதிக்கவே மறுத்து விலகிவிட்டார். அவர் எப்போதுமே அவருடைய இசை மேல் இன்னொருவருடைய கருத்தை, திருத்தத்தை இம்மியளவும் ஏற்பவரல்ல. எனவேதான், அந்த சிம்ஃபொனியை இளையராஜா வெளியிடவில்லை" என்று கூறுகிறார்.

இது குறித்து ஜோன் ஸ்கொட்டிடம் கேள்வி எழுப்பியபோது, "விமர்சனங்கள் வந்தபோதும், நான் அந்த சிம்ஃபொனி யை வெளியிட வற்புறுத்தினேன். ஆனால், இளையராஜா மறுத்துவிட்டார். இசை விமர்சகர்கள் என்ற பெயரில் இசையமைப் பாளர்களை அழிக்க நினைப்போர் பற்றி நிக்கோலஸ் ஸ்லோனிம்ஸ்கி எழுதியுள்ள 'LEXICON OF MUSICAL INVECTIVE' என்ற அற்புதமான நூலில் பல விடயங் களைக் கூறியுள்ளார். இது பீத்தோவன் காலத்திலிருந்தே இருந்துள்ளது. விதி விலக்கே இல்லாமல் இசை விமர்சகர்கள் பலரும் சிறந்த இசையமைப்பாளனை காணாமல் போகச் செய்துள்ளனர்" என்கிறார் ஜோன் ஸ்கொட்.

### சிம்ஃபொனி என்றால் என்ன?

ஜான் ஸ்காட் கூறுவதுபோல் "இதுதான் சிம்ஃபொனி..." என்று வரையறுத்து எளிதாகச் சொல்லிவிட முடியாது.

"சிம்ஃபொனி என்பது ஐரோப்பிய மேற்கத்திய பராம்பரிய இசை மரபில், பல்வேறு இசைக் கருவிகள் ஒன்றாக இசைக்கப்படும் ஓர் ஒத்திசைத் தொகுப்பு எனலாம். நீண்ட நேரம், பல இசை அடுக்குகளுடன், ஐம்பதிற்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களால் இசைக்கப்படும், பல இசைக்கருவிகளின் பெரும் இசைக் கோர்வை, இசைத் தொகுப்பு. இசையைக் காதலிப்பவர்களுக்குப் பெரும் விருந்து. சிம்ஃபொனி 1730 - 1820 காலக்கட்டத்தில் அறிமுகமாகிறது. பல இசைக் கருவிகளை ஒன்று சேர்த்து, நீண்ட, அடர்த்தியான அடுக்குகள் கொண்ட இசைக் கோர்வை யாகதான் அது ஆரம்பத்தில் உருவானது. மெல்லிய இசையுடன் தொடங்கும் 'சொனாட்டா (Sonata)', மெதுவாக ஒருங்கிணைந்து இசைக்கோர்வையில் இணையும் 'ஸ்லோ (Slow)', சிம்ஃபொனி யின் மையத்தைத் தொடும் 'டான்ஸ் ஃபார்ம் (scherzo)' மற்றும் உச்ச நிலைக்குப்போய் அடங்கும் 'சொனாட்டா - ரோண்டோ ஃபார்ம் (sonata-rondo form)' என நான்கு பகுதிகளாக சிம்ஃபொனி இசை இயக்கம் வரையறுக் கப்பட்டது. அதற்கெனப் பல விதிகளும் இருக்கிறது" என்கின்றனர் இசை விமர்சகர்கள்.

ஆனால், மரபை உடைத்து புத்தாக்கம் செய்வதில்தானே கலைஞனின் அழகு இருக்கிறது. ஜோசப் ஹெய்டன், மொஸார்ட், பீத்தோவன் என அடுத்தடுத்து வந்த இசை சாதனையாளர்கள் சிம்ஃபொனி வடிவத்தை மேம்படுத்தி இசைக்கோர்வைகளை ஆழமாகவும் அடர்த்தியாகவும் பெரும் உணர்ச்சிமிக்க தாகவும் புதுமைமிக்கதாகவும் மாற்றிக் கொண்டே, மேம்படுத்திக்கொண்டே இருக்கின்றனர். மொஸார்ட், பீத்தோவன், சாய்கோவ்ஸ்கி வரிசையில் இப்போது தமிழரான இளையராஜாவும் அதைச் செய்துள்ளார்.

இளையராஜாவுக்கு சிம்ஃபொனி இசையை அரங்கேற்ற வேண்டும் என்பது நீண்டநாள் கனவு. சிம்ஃபொனியை உருவாக்குவதில் இருக்கும் மிகப்பெரிய சவாலே நூற்றுக் கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களுக்குத் தனித்தனியாக இசைக் குறிப்புகளை எழுதிக் கொடுப்பதுதான். 1986ஆம் ஆண்டு முதலே அதற்காக ஆயத்தமாகத் தொடங்கிவிட்டார் இளையராஜா. மேற்கத் திய இசையுடன் தமிழ் நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானிய இசையை ஒருங்கிணைத்து, How to Name It? (1986), Nothing but Wind (1988)என நீண்டநேர இசைத்தொகுப்பை வெளியிட்டு இருந்தார் இளையராஜா.

டாபெஸ்ட் சிம்ஃபொனி ஆர்க்கெஸ்ட் ராவை வைத்து 2005ஆம் ஆண்டில் திருவாசகத்தை மேற்கத்திய இசைக் கருவிகளின் இசையோடு வெளியிட்டார். மேலும், தனது திரைப்படப் பாடல்களிலும் சில பரீட்சார்த்த முயற்சிகளை செய்து கொண்டே இருந்தார். இப்படி தொடர்ந்து சிம்ஃபொனியை அமைப்பதில் ஆர்வம் காட்டி தனது கனவுக்கு உயிரூட்டி வந்தார். இப்போது அந்தக் கனவு நிறை வேறிவிட்டது. தனது முதல் சிம்ஃபொனி யை அரங்கேற்றிவிட்டார்.

நூற்றுக்கும் மேற்பட்ட இசைக்கருவிகளின் இசையை உள்வாங்கி, கட்டுக் கோப்புடன் பிரதிபலிக்கும் கச்சிதமான உயரம், அகலத்துடன் அமைக்கப்பட்ட அரங்கிலேயே சிம்ஃபொனி அரங்கேற்றம், ஒலிப்பதிவு செய்யப்படும். அதன் அரங்கேற்றமே கேட்பது மட்டுமின்றி, காண்பதற்கே அலாதியான அனுபவம் தான். எனவேதான், லண்டன் அப்பல்லோ அரங்கத்தைத் தேர்வு செய்தார் இளையராஜா.

1993 சிம்ஃபொனிக்கு விமர்சனங்கள் எழுந்ததால், வேலியன்ட் சிம்ஃபொனிக்கு குறிப்புகள் எழுதும்போது, இளையராஜா கவனமாக இருந்தார். "என்னை ஓர் இந்தியனாகவோ தமிழராகவோ உணர்ந்து கொள்ளாமல் இருந்து இசைக் குறிப்பு களை எழுதினேன்" என இளையராஜா கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இளையராஜாவின் சிம்ஃபொனி நிகழ்வை நேரில் காண அமெரிக்காவில் இருந்து லண்டனுக்குச் சென்றிருந்த, அவரது தீவிர ரசிகரான ரவி பழனிவேலு, அப்பல்லோ அரங்கத்தில் தனக்கு கிடைத்த அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். "நிகழ்வு ஆரம்பமானவுடன் ரஷ்யன் சிம்ஃபொனி இசை துணுக்கு ஒன்றை வாசித்து காண்பித்தனர். அதன்பிறகு ராஜா மேடைக்கு வந்தார். வாத்தியக் கலைஞர்களை தலைமையேற்று நடத்தும் நடத்துநர் மைக்கேல், ராஜாவிடம் அனுமதி பெற்று நிகழ்ச்சியை ஆரம்பித்தார்.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH

SALES REPRESENTATIVE

DIR: 647.786.3436

pushpakana33@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED

5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



## நாமும் நமது இல்லமும் 674

# 2025ஆம் ஆண்டில் அடமானக் கடன் புதுப்பித்தல்


ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969




ஏறக்குறைய 1.2 மில்லியன் (12 இலட்சம்) அடமானக்கடன்கள் இந்த ஆண்டு (2025) புதுப்பிக்கப்பட இருக்கின்றன. 2020ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களிற்குரிய அடமானக் கடன்கள் அநேகமாக இவ்வருடம் புதுப்பிக்கப்பட இருக்கின்றன. 2022ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திற்குப் பிற்பாடே கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் ஏறத் தொடங்கியது. இதற்கு முன்பாகப் பெறப்பட்ட அடமானக் கடன்கள், சரித்திரத்திலேயே குறைவாகக் காணப்பட்டது. இவ்வருடம் புதுப்பிக்கப்பட இருக்கும் அடமானக்கடன்களின் வட்டி வீதம் முன்பு இருந்ததைவிட நிச்சயமாக அதிகமாகவே காணப்படும்.

2021ஆம் ஆண்டிலும் மற்றும் 2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் வாங்கிய ஆதன விலையைவிட இப்பொழுது ஆதன விலை அநேகமாகக் குறைவாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை. இதனால் அடமான கடன் புதுப்பிக்கப்படும்போது சில சந்தர்ப் பங்களில், இன்றைய ஆதன விலையை விட அடமானக் கடனின் பெறுமதி அதிகமாகவும் காணப்படலாம். (சில பகுதிகள் விதிவிலக்காகக் காணப்படலாம்)

இதனால், அவ்வாறு ஆதனவிலை குறைவாகக் காணப்பட்டாலும், இதுவரை ஒழுங்காக அடமானக்கடன் செலுத்தப்பட்டு வந்திருந்தால், அடமானக்கடன் நிதி நிறுவனத்தால் எதுவித நிபந்தனையும் இன்றி நடைமுறையில் ஆதனக்கடன் புதுப்பிக்கப்படும். ஆனால், வட்டிவீதம் இப்பொழுது இருப்பதே கிடைக்கும். இதனால் அடமானக்கடன் மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கக் கூடிய சாத்திய கூறுகள் உள்ளது.

ஆனால், இதுவரையில் மாதாந்தக் கொடுப்பனவில் தாமதங்கள் ஏற்பட்டிருந் தால் சில நிதி நிறுவனங்கள் அடமானக் கடனை புதுப்பிப்பதில் சில நிபந்தனைகளை கொண்டுவரலாம், சில சந்தர்ப்பங் களில் புதுப்பிக்காமல் தவிர்க்கலாம்.

கனடா ரீதியில் பெப்ரவரி 2022ஆம் ஆண்டின் அதிகூடிய ஆதன விலையில் இருந்து பெப்ரவரி 2025ஆம் ஆண்டின் விலை 18%இனால் இறங்கியுள்ளது. ஆதன விலை இறக்கம் இடத்திற்கு இடம் வித்தியாசப்படுவதனைக் காணலாம்.

எனினும், முன்னணி நிதி நிறுவனங்கள் இலகுவாகப் புதுப்பித்து கொடுக்கும் எமது பலவிதமான கடன்களின் வட்டி வீதத்தில் அடமானக்கடனின் வட்டிவீதமே மிகவும் குறைவானது. எனவே அடமானக்கடனின் கொடுப்பனவில் தாமதமில்லாமல், தவறு செய்யாமல் ஒழுங்காகக் கொடுப்பனவு செய்வது மிக முக்கியமாகும்.

வேறுவிதமான கடன்களின் வட்டி வீதம் அதிகமாக இருப்பதால் ஆதனத்தின் 80%ஆன பெறுமதியைவிட அடமானக் கடன் குறைவாகக் காணப்பட்டால் வேறு கடன்களை (Credit Card, Personal Loan, Unsecured Loan, Car Loan, Private Secondary Loan) ஆதன அடமானக் கடனிற்குள் கொண்டு வருவதனைப் பற்றியும் சிந்திக்கலாம்.

அத்துடன் அடமானக்கடனை திருப்பி செலுத்தும் காலத்தையும் (Amortization) அதிகரிப்பதனைப் பற்றியும் தகுந்த ஆலோசகரின் ஆலோசனையைப் பெறலாம். (பொதுவாக 25 வருடங்களிற்குள் கடனை திருப்பிக் கொடுக்கும் காலம்)

ஏற்கனவே 2022ஆம் ஆண்டில் மாறாத அடமானக்கடன் (Closed Mortgage) பெற்றவர்களின் அடமானக்கடனின் வட்டி வீதம் பெரிய அளவில் குறைந்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம். ஆனால், மாறுகின்ற அடமானக்கடனை வைத்திருந் தவர்களின் நிலைமை மகிழ்ச்சிக்குரியதாக இருக்க முடியாது.

எனினும், புதுப்பிக்க இருக்கும் அடமானக் கடனைப் பற்றிய முன்ஏற்பாடுகளை ஆறு (6) மாதத்திற்கு முன்பாக ஆயத்தம் செய்வது சிறப்பு.

இப்பொழுது கனடாமீது 25%ஆன இறக்குமதி வரியை அமெரிக்கா மார்ச் 04, 2025இலிருந்து நடைமுறைப்படுத்தியுள் ளது. மேலதிக வரிகளையும் கனடாமீது கொண்டு வரலாம் என அமெரிக்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளா. இதனால் இரண்டு நாடுகளும் பணச்சுருக்கத்திற்குள் (Recession) செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால், கனடா Recessionஐ தவிர்ப்பதற்காக கனடியர்கள் எதிர் பார்த்தது போலவே கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் 0.25%இனால் வட்டியை இறக்கியுள்ளார். புதிய வங்கியின் வட்டி வீதம் 2.75% ஆகவும் முதன்மை வட்டி வீதம் 4.95%ஆகவும் உள்ளது. இப்பொழுது 5 வருடத்திற்கு மாறாத வட்டி வீதம் 4இற்குக் குறைவாகப் பெறக்கூடியதாக உள்ளது.


அறிவித்தல்

CANADIAN WOMEN COUNCIL &
தீபம் இணையத் தளம் இணைந்து வழங்கும்
கனடா வாழ் (55+) தமிழ் மூத்தோர் & மாணவர்களுக்கான
திருக்குறள் இசைப்போட்டி

கலந்துகொள்ளும் மூத்தோர்கள் தாம் விரும்பிய இசையில், ஏதாவது ஒரு அதிகாரத்திலிருந்து முதல் அல்லது இறுதி 5/ 6 குறள்களையும், போட்டியின்போது சமர்ப்பிக்கவேண்டும். குறள் விளக்கம் தேவையில்லை. போட்டியில் கலந்து கொள்ளும் கீழ்/மேல் வகுப்பு மாணவர்கள் தங்களுக்குரிய இசையில் ஏதாவது ஒரு அதிகாரத்திலிருந்து முதல் அல்லது இறுதி 05 குறள்களையும் அதன் விளக்கத்தினை தமிழிலும் ஆங்கிலத்திலும் சமர்ப்பிக்க வேண்டும். போட்டியின் முடிவுகள் ஆசிரிய நடுவர்களால் தீர்மானிக்கப்படும். போட்டியில் தெரிவாகும் மூத்தோர்களுக்கு & மாணவர்களுக்கு சிறந்த பரிசில்கள் வழங்கப்படும்.
மாணவர்கள், மூத்தோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**போட்டிகள் நடைபெறும் இடம்** - Scarborough, Etobicoke

பங்குபற்ற விரும்பும் மூத்தோர்கள் மாணவர்கள், பற்றிய விபரங்களை, ஏப்ரல் 01ஆம் திகதிக்கு முன் கீழ் காணும் இலக்கங்களில் தொடர்புகொண்டு பதியுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு : CWC தலைவர் - 647.505.4253
தீபம் ஆசிரியர் - 416.569.5121



வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 92
Psychosocial Educational Series - 92
VASANTHAM HEALTH & WELLNESS CENTRE

17 March 2025 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 11:00 pm - 1:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

மனம் போன போக்கிலே...
In Our Wandering Minds...





Tharani Ketheeswaran
M.A. Tamil Literature

Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!





Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

# நிலாவில் நீலப்பிசாசு



குரு அரவிந்தன்

சந்திரனில் 'நீலப்பிசாசு' என்று சமீபத்தில் ஊடகங்களில் வெளிவந்த செய்தியை வாசித்தபோது, பலரும் பதட்டப்பட்டனர். மனிதர்களைச் சந்திரனில் குடியேற்ற அமெரிக்கா முயற்சி செய்துகொண்டு இருக்கும் இந்த நேரத்தில் அங்கு பிசாசு குடிகொண்டிருக்கிறதா என்ற பயமும் ஒருபக்கம் எழுந்தது. இது உண்மையா, சந்திரனில் பிசாசு இருக்கிறதா? என்றெல்லாம் கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டனர். எட்டாம் வகுப்பில் என்னிடம் கல்வி கற்கும் சில மாணவர் களுக்கும் இந்த சந்தேகம் இருந்ததால், இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தனர். மேலை நாட்டவருக்கும் இந்தப் பேய், பிசாசுகளில் நம்பிக்கை இருப்பதால்தான், கலோவீன் தினத்தைப் பிரமாண்டமாகக் கொண்டாடுகின்றனர். சின்னப் பிசாசா அல்லது பெரிய பிசாசா? எப்படி இந்த நீலப்பிசாசு சந்திரனுக்கு வந்தது?

அறிவியல் சார்ந்த செய்திகளை உடனுக் குடன் அறிந்து கொள்ளாவிட்டால், இது போன்ற சந்தேகங்கள் வரத்தான் செய்யும். நிலா என்று சொல்லப்படுகின்ற சந்திரனில் 'ப்ளூ கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு இருப்பது உண்மைதான். உங்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கும், ஆனால் எங்கள் பூமியில் இருந்துதான் அந்த நீலப்பிசாசு அங்கு சென்றதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆமாம், சந்திரனில் மனிதன் ஏற்கனவே தரை இறங்கி இருந்தாலும், தரை இறங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக 2025 ஜனவரி 15ஆம் திகதி அன்று நிலாவை நோக்கித் தரை இறங்கியான இந்த 'ப்ளூ கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு அமெரிக்காவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அது மார்ச் மாதம் 02ஆம் திகதி வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கி இருந்தது.

நிலாவில் தரை இறங்குவது என்பது எவ்வளவு கடினமானது என்பது அனேகருக்குத் தெரியாமல் இருக்கலாம், காரணம் அங்கு ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதாலும், தரை இறங்குவதற்குத்




தேவையான சரியான இடத்தைத் தேர்ந்தெடுப்பதும் மிகக் கடினமானதாகும். சந்திரத்தரை சிறிய குன்றுகளையும், குழிகளையும் கொண்டதாக இருப்பதால், பூமியில் இருந்து சரியான இடத்தைத் தெரிவு செய்வது கடினமாகும். இதுவரை சுமார் 143 விண்கலங்கள் பூமியில் இருந்து சந்திரனுக்கு அனுப்பப்பட்டாலும், அவற்றில் 27 விண்கலங்கள் மட்டும்தான் வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கி யிருக்கின்றன. பாதுகாப்பாக நிலாவில் தரை இறங்கிய ரோபோக்களில் இந்த நீலப்பிசாசும் ஒன்றாகும். மத்திய அமெரிக்காவில் உள்ள ஒரு வகை மின்மினிப் பூச்சிகளுக்கும் 'ப்ளூ கோஸ்ட்' என்ற பெயர் இருப்பதால், அந்தப் பெயரைத்தான் இந்தத் தரை இறங்கிக்குச் சூட்டியிருந்தனர்.

இதுவரை வெற்றிகரமாகச் சந்திரனில் ரோபோட்டிக் விண்கலங்களைத் தரை இறக்கிய நாடுகளில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகள் சாதனையைப் படைத்திருக்கின்றன. அமெரிக்கா மட்டும் தான் மனிதரைச் சந்திரனில் இதுவரை வெற்றிகரமாகத் தரை இறக்கியிருக்கின் றது. சந்திரனுக்கான இந்தத் திட்டம் வெற்றி அடைந்தால், அடுத்து மனிதரை அங்கு தரை இறக்கி, விண்வெளி நிலையத்தில் குடியிருப்பதுபோல, சந்திரக் குடியிருப்புக்குத் தயாராகுகின்றனர்.

இதைத் தொடர்ந்து செவ்வாய் கிரகம் நோக்கிய பயணம் வெகுவிரைவில் ஆரம்பமாகலாம்.

# இளையராஜா...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

இளையராஜாவின் சிம்ஃபொனி 4 பாகங்களாக வாசிக்கப்பட்டது. ஒவ்வொரு பாகமும் 15 நிமிட நேரம்வரை வாசிக்கப் பட்டது. ஊசி விழுந்தால்கூட சத்தம் கேட்கும் அளவுக்கு நிசப்தமாக இருந்த அரங்கத்தில் ராஜாவின் இசை அங்கிருந்த அனைவரையும் ஊடுருவியது. வாத்தியக் கலைஞர்கள் வாசிக்க வாசிக்க என்னில் எழுந்த உணர்வுகள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. ஒவ்வொரு பாகம் வாசித்து முடித்தவுடன் எழுந்த கைதட்டல் அடங்க வெகு நேரமானது. அந்தக் கைதட்டலைக் கேட்கும் போதெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் மேலிட ராஜாவைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மூன்றாவது பாகம் ராஜாவின் உச்சம். மேடையில் இருந்த 77 இசைக் கலைஞர் களுக்கும் வேலை கொடுத்து இருக்கிறார். இதை எப்படி ஒரு மனிதர் எழுதியிருக்க முடியும் என்று ஆச்சரியப்படாதவர்கள் இருக்க முடியாது. அந்தப் பாகத்தைக் கேட்கும் போதுதான் ராஜாவை நாம் திரைப்பட இசை எனும் கூண்டுக்குள் வைத்திருக்கிறோம் என்று தோன்றியது. ராஜா உலகம் எங்கும் பறக்க வேண்டிய ஓர் இசைப்பறவை. திரைப்படப் பாடல் களைக் கொடுத்து 5 நிமிடத்திற்குள் ஒரு பாடல், அதில் 2 பிஜிஎம் என கூண்டுக்குள் இருந்த ஒரு பறவை, இன்று இந்தப் பிரபஞ்சத்தை ஆளக் கிளம்பி விட்டது. மூன்றாவது பாகம் வாசிக்கும் போதும் திகைத்திருந்த ரசிகர் கூட்டம், அது முடிந்தவுடன் உச்சபட்ச ஆச்சரியத் தில் கைதட்டியது. பலத்த கைதட்டல் முடிய நேரம் ஆனது. அப்போதும் நான் உணர்வுகளின் பிடியில் இருந்தேன்.

நான்காவது பாகமும் அற்புதம். கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் நீடித்த இசை நிகழ்ச்சியில் எப்போதும்போல் அந்த மேடையிலேயே அமர்ந்து அவர் எழுதிய இசைக் குறிப்புகளை கையில் வைத்துக் கொண்டு, அனைத்தும் சரியாக வாசிக்கப் படுகிறதா என்று சோதித்துக் கொண்டே இருந்தார் ராஜா.

நிகழ்வு முடிந்தவுடன் அரங்கமே எழுந்து கைதட்டியது. நடத்துநரும் ராஜாவும் தலை குனிந்து அந்தப் பாராட்டுகளை ஏற்றுக் கொண்டனர். ராஜாவை சில வார்த்தைகள் பேசுமாறு அழைத்தார் மைக்கேல். "சிம்ஃபொனியை நான் விளக்க முடியாது, நீங்கள் உணர்வதுதான் சரியாக இருக்கும்" என்று தனக்கே உரிய பாணி யில் சொன்னார். அதன் பிறகு சிறிய இடைவேளை விடப்பட்டது.

சிம்ஃபொனி நிகழ்வில் ஓர் ஆச்சரியம் இருப்பதாக ஏற்கனவே இளையராஜா சொல்லியிருந்தார். அது இடைவேளைக்கு பிறகு நடந்தது. ராஜாவின் அதி அற்புத திரைப்படப் பாடல்களை றோயல் ஆர்கெஸ்டரா குழுவினர் வாசிக்கக் கேட்கும் பாக்கியம் கிடைத்தது. எத்தனையோ ஆயிரம் முறை கேட்ட பாடல்கள் அப்போது புதியதாகக் கேட்டன.




'மடை திறந்து', 'ராஜா ராஜாதி ராஜனிந்த ராஜா', 'தும்பி வா', 'கண்ணே கலைமானே', 'பூவே செம்பூவே' பாடல்கள் தொடர்ச்சியாக வாசிக்கப்பட்டன. இதைக் கேட்கும்போதுதான் தெரிந்தது, இந்த சிம்ஃபொனியை நமக்கு ராஜா எப்போதோ கொடுத்து விட்டார் என்று. அதன் பிறகு முடிவடையாத சிம்ஃபொனி என்ற தலைப்பில் மீண்டும் ஓர் இசை விருந்து ஆரம்பித்தது. அது 'புதிய வார்ப்புகள்' படத்தில் இடம்பெற்ற 'இதயம் போகுதே' பாடல்.

ஜெயா டிவி நிகழ்ச்சி ஒன்றில், "சிம்போனினா என்ன சார்" என்று பிரகாஷ்ராஜ் கேட்கும்போது, இந்தப் பாடலைத்தான் வாசித்துக் காண்பித்தது நினைவு வந்தது. அப்படியானால் இளைய ராஜா சிம்ஃபொனி செய்து 45 வருடங்கள் ஆகிவிட்டது. நமக்குத்தான் புரியவில்லை. அப்பல்லோ அரங்கத்தில் 'இதயம் போகுதே' பாடல் வாசிக்கும் போதே மெய் சிலிர்த்துப் போனேன். கூடுதல் போனஸாக அவர்கள் வாசிக்க ராஜா பாட ஆரம்பித்தார். அதுவும் ஆர்கெஸ்டரா வாசிப்பதற்கு ஏற்ப பாடியது ராஜாவின் திறமையை பறைசாற்றியது.

அதன் பிறகு ராஜாவின் ஐகானிக் பிஜிஎம்கள் வாசிக்கப்பட்டது. ஏற்கனவே கேட்டதுதான் என்றாலும், 77 இசை விற்பன்னர்கள் சேர்ந்து வாசிக்கக் கேட்கும்போது, பிரம்மாண்டமாக இருந்தது. "இன்று என் வாழ்வில் மிக முக்கியமான நாள்" என்று ராஜா சொன்னபோது, ராஜாவுடைய எதிர்பார்ப்புத் தெரிந்தது. அவரது பேச்சில் மிகுந்த மனநிறைவு தெரிந்தது.

நமது கலாசாரப்படி இசை நிகழ்ச்சியை நடத்திய, மைக்கேலுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார், இளைய ராஜா. இசை நிகழ்ச்சி முடிந்து அறைக்கு வந்த பின்னும் பிரமிப்பு அடங்கவில்லை. ராஜா சார் வாழும் காலத்தில் நாமும் வாழ்வதே நமக்குக் கொடுப்பினைதான்" என்கிறார், ரவி பழனிவேலு.

உண்மைதான், நன்றி ராசய்யா.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228


யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 62



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் தொண்ணூற்று நான்காம் செய்யுளைக் கவனிப்போம்.

“நண்பு இலார்மாட்டு நசைக் கிழமை செய்வானும்,
பெண்பாலைக் காப்பு இகழும் பேதையும், பண்பு இல்
இழுக்கு ஆன சொல்லாடுவானும், இம் மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியாதார்.”

‘நசை’ என்றால் ‘விருப்பம்’ என்று பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “நட்புக்குணம் இல்லாதவரிடத்து நண்பராக இருப்பவரும், மனைவியை இகழ்ந்து பேசும் அறிவில்லாதவனும், குணமில்லாத சொற்களைச் சொல்பவனும், தம்முடைய ஒழுக்கத்தை உறுதியாகக் கடைப்பிடிக்காதவர் ஆவார்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

இந்தச் செய்யுளில் புலவர், அன்புடையோரிடமே நண்பராக இருப்பது, மனைவியை இகழ்ந்து பேசாமல் இருப்பது கணவனுக்குரிய ஒழுக்கம், குணமுள்ள சொற்களைச் சொல்வது எல்லோரினதும் ஒழுக்கம் போன்ற கருத்துகளை எடுத்தியம்பியுள்ளார். இவை எக்காலத்துக்கும் பொருந்தும் அறிவுரைகளாக எடுத்துக் கொள்ளலாம். இந்தச் செய்யுளில் மனைவிக்குரிய ஒழுக்கத்தைப்பற்றி எதுவும் சொல்லாமல் இருப்பது குறையாகத் தெரிகின்றது. இந்த அறிவுரையும் எக்காலத்தும் பொருந்தும் அறிவுரையாகவே உள்ளது.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிஎழுபத்திஏழாம் பாடலைக் கவனிப்போம்.

இது, வெண்பூதி என்னும் புலவர் பாடிய பாட்டு. ‘தலைவன் பொருள் தேடப் பிரிந்து செல்ல நினைக்கிறான் என்று தோழி கூறினாள். அதற்குத் தலைவியுரைத்த மறுமொழியே இச்செய்யுள். பிரிவைக் குறிப்பதால் இது பாலைத்திணை சார்ந்தது.

தலைவன் பொருள் தேடப் போக எண்ணியிருந்தான். புறப்படுவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தான். இதை அறிந்தாள் தோழி. அவள் இச்செய்தியைத் தலைவிக்கு அறிவித்தாள். “தலைவன் செய்து கொண்டிருக்கும் செயல்களைப் பார்த்தால் பொருள் தேடச் செல்வான் போலத் தோன்றுகின்றது. அவன் பிரிந்து போனால், அத்தனிமையை நீ எப்படித் தாங்கப் போகின்றாயோ?” என்றாள் தோழி. இதைக் கேட்ட தலைவி அவளுக்குக் கூறிய மறுமொழிதான் இச்செய்யுள்.

“பெயல்மழை துறந்த புலம்புறு கடத்துக்,
கவைமுள் கள்ளிக் காய் விடு கடு நொடி,
துதை மென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்த
பொருள்வயின் பிரிவார் ஆயின், இவ்வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆரும் இல்லதுவே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “தோழியே! அவர் பொருள் தேடுவதற்குப் போக வேண்டுமானால் கடத்தற்கரிய வழியைக் கடந்து செல்ல வேண்டும். அவர் கடந்து செல்லவேண்டிய வழி பாலை நிலம். அது மழையைக் கண்டறியாத மாபெரும் வறண்ட நிலம். அந்த வழியிலே அவர் தனியாகத்தான் நடந்து போக வேண்டும். நீரும் நிழலுமற்ற பாலைவன வழியே யார்தான் நடப்பார்கள்?”

அருட்செல்வத்தை மதிக்காமல், பொருட்செல்வத்தைப் போற்றும் உலகமக்களின் அறியாமையை எடுத்துக்காட்டியது இச்செய்யுள்.

அந்தப் பாலைவனம் கடத்தற்கரியது. இது அவருக்குத் தெரியும். தெரிந்தும் அதைக் கடந்து சென்று பொருளீட்ட நினைக்கிறார். நம்மைத் தனியே விட்டுச்செல்வது இரக்கமற்ற செய்கை. அருளுக்கு மாறானது. இதுவும் அவருக்குத் தெரியும். தெரிந்தாலும் நம்மைப் பிரிந்து செல்ல நினைக்கிறார்.

அவருடைய இந்த நினைப்பு உண்மையானால் இந்த உலகத்தைப்பற்றி நாம் என்ன நினைப்பது. செல்வம் ஒன்றுதான் உறுதியான பொருள், எல்லா நன்மைகளையும் தரும் பொருள். ஆதலால் அதனையே பெரிதாக மதிக்கின்றனர். அருளை யாரும் சிறந்ததாக ஏற்றுக் கொள்வதில்லை. பொருளைக் காட்டிலும் அருளை இழிவானதாகவே எண்ணுகின்றனர். இதுதான் இவ்வுலகப் போக்கு என்றுதான் முடிவு கட்டவேண்டும்.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிஎண்பத்திஒன்றாம் பாடலைக் கவனிப்போம்.

இது கிள்ளிமங்கலங்கிழார் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவனைப் பழித்த தோழியைப் பார்த்த தலைவி சொல்லியது. இது மருதத்திணை சார்ந்தது.

தலைவன் பரத்தையரை நாடிச் சென்றிருந்தான். தலைவி அதை அறிந்து தானாகவே வருந்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது தோழி தலைவிக்குச் சமாதானம் சொல்ல முன் வந்தாள். தலைவனுடைய தீயொழுக்கத்தை எடுத்துக் காட்டினாள். இதனால் தலைவிக்கு ஆறுதல் ஏற்படும் என்று எண்ணித்தான் இவ்வாறு சொன்னாள்.

தலைவியோ சிறந்த கற்பு நெறியிலே நிற்பவள். தலைவன் செயலுக்காக வருந்தினாலும், பிறர் அவனைப் பழிப்பதைப் பொறுத்துக் கொள்ளமாட்டாள். ஆதலால் அவள் தலைவனைப் பழித்த தோழியைக் கடிந்து கொண்டாள்.

> “Words are easy, like the wind; faithful friends are hard to find.”
> William Shakespeare

“இதுமற்று எவனோ தோழி! துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப்பு எருமை ஈன்றணிக் காரா ஆன்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே”.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “பெரிய கொம்புகளையுடைய எருமை. அது அண்மையில் கன்று போட்டது. அந்த எருமையின் கன்று அதன் அருகிலேயே கட்டப்பட்டிருக்கின்றது. அந்த எருமையும் தன் கன்றை விட்டுப் பிரியாமலே பக்கத்தில் உள்ள பசுமையான பயிரை மேய்ந்து கொண்டிருக்கும். இத்தகைய செழிப்பான ஊரையுடையவன் நம் தலைவன்.

அவனுடைய செல்வம் நிறைந்த மனையிலே வாழ்கின்றோம் நாம். நாம் வயதேறிய இல்லக் கிழத்தியர். இல்லறத்திலே செய்ய வேண்டிய கடமைகள் எத்தனையோ உண்டு. அவற்றைச் செய்வதே நம் கடமை. ஊடியிருக்கும் இச்சமயத்தில் அவரைப்பற்றி இப்படிப்பட்டவர் என்று பழித்துரைக்கும் வேலை நமக்கு வேண்டாம். இதனால் நமக்கு ஒரு பயனும் இல்லை.” என்றாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிஎண்பத்திஇரண்டாம் பாடலைக் கவனிப்போம்.

இது, மடல் பாடிய மாதங்கீரன் என்னும் புலவர் பாடிய பாட்டு. இவர் மடல் பாடுவதில் வல்லவர் என்பது, மடல் பாடிய என்ற அடைமொழியால் விளங்குகின்றது. தலைவன் விருப்பத்திற்குத் தோழி இணங்கவில்லை. தலைவியும் இரங்கவில்லை. அப்பொழுது தலைவன் மடலேறத் துணிந்தான். அவன் தன் துணிவைச் சொல்லியது இச்செய்யுள். இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தலைவன் பலமுறை சென்று தோழியிடம் முறையிட்டான். தலைவியுடன் தன்னைப் பிணைத்து வைக்கும்படி வேண்டிக் கொண்டான். எத்தனையோ விதமாகத் தன் உள்ளக் காதலை வெளியிட்டான். ஒரு பயனும் இல்லை. தோழியும் இடந்தரவில்லை. தலைவியும் இரக்கங் காட்டவில்லை. இதன்பின் மடலேறுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. மடலேறுதல் ஒன்றுதான் நாம் தலைவிபால் அனுப்பும் இறுதியான தூதும் என்று முடிவு செய்து கொண்டான். இந்த முடிவை அவனே வாய்விட்டுச் சொல்லுவதாக அமைந்த பாடல்தான் இது.

“விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்,
மணிஅணி பெருந்தார் மரபின் பூட்டி
வெள் என்பு அணிந்து, பிறர் எள்ளத் தோன்றி,
ஒருநாள் மருங்கில், பெருநாண் நீக்கித்
தெருவின் இயலவும் தருவது கொல்லோ
கலிழ்ந்து அவிர் அசை நடைப்பேதை
மெலிந்திலள், நாம்விடற்கு அமைந்த தூதே.”

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம். “தோழியும் நம்மிடம் இரக்கம் காட்டவில்லை. அழகிலே சிறந்து விளங்கும் மெல்லிய நடையை உடையவள் தலைவி. ஆயினும், அவள் அழகுக்கும், மெல்லிய நடைக்கும் ஏற்ற இரக்கம் அவளிடம் இல்லை. ஆதலால் அவள் என்பால் கனிந்த சிந்தையைக் காட்டவில்லை. இனி நமக்குத் துணை செய்யக்கூடிய தூது மடலேறுதல் ஒன்றேதான் உண்டு.

செழித்து உயர்ந்து வளர்ந்த பனை மரத்திலே விளைந்த மடல்களைக் குதிரையாகச் செய்வேன். முறைப்படி அதன் கழுத்திலே மணிகளோடு சேர்ந்த பெரிய மாலையைப் பூட்டுவேன். நானும் என் கழுத்திலே வெண்மையான எலும்பு மாலையை போட்டுக் கொள்வேன். பிறர் என்னைப் பார்த்துச் சிரிக்கும்படி அக்குதிரையின்மேல் காட்சியளிப்பேன். ஒரு நாள் என்னுடைய பெரிய நாணத்தையும்விட்டு, தெருவின் வழியே செல்வேன். இதுதான் என் காமம் எனக்குகந்த இறுதியான தூது.” என்கிறான் தலைவன்.

இந்த மூன்று பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 11



# சுயமுன்னேற்றம்



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நீங்கள் காதலித்திருக்கிறீர்களா...
ஆம் என்று சொல்லுமுன் யாரை என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள். அதை தெரிந்து கொண்ட பின்பும் ஆம் என்று சொன்னால் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். இல்லையென்றால் its never late இப்போதே நேரம் தாழ்த்தாமல் காதலிக்க ஆரம்பியுங்கள்.

காதலித்தவர்களுக்குத்தான் தெரியும் காதலின் அருமை. அது தரும் ஊட்ட சக்தி, அது செய்யும் மாயை, இளகிய மனம், தான் வேண்டியதை அடைவதில் உறுதி, எதையும் செய்யத் துணியும் திடம், இதுதான் எனக்கு வேண்டுமெனும் தெளிவு, அந்தக் காதலுக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராகும் தியாகம். இன்னும் இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். இந்தக் காதல் என்பது பொதுமறை. படித்தவர், படிக்காதவர், ஏழை, செல் வந்தர் என்ற பாகுபாடு இதற்கு இல்லை.

போதும் இந்த வாழ்க்கை என்று சலித்தவனுக்குக்கூட காதல், வாழ்க்கையில் அழகிய பிடிமானத்தைத் தந்து விடும். Zeroவாக இருப்பதாக நினைப்பவர்களைக் கூட Heroவாக மாற்றக் கூடிய அற்புத சக்தி வாய்ந்த இந்தக் காதலை, அந்த அழகிய அன்பை யாரோ ஒருவர் உங்களுக்குத்தர வேண்டுமென்பதோ, யாரோ ஒருவருக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்பதோ இல்லை. உங்களுக்கு நீங்களே கொடுத்து பாருங்கள். ஆம் உங்களை முதலில் காதலியுங்கள். அது உங்களுக்கு செய்யும் மந்திரத்தை, அது தரும் ஆற்றலை உங்களால் அணு அணுவாக உணர முடியும்.

என்றாவது நீங்களே உங்களிடம் எது உங்களை நீங்களாக இருக்கச் செய்கிறது, எது உங்களுக்கு திருப்தி தரக் கூடியதாக இருக்கிறது என்று கேட்டிருக்கிறீர்களா. பொதுவாக பலரும் பணம், பதவி, படிப்பு, இதை வைத்துத் தான் தங்களை யார் என்று நிர்ணயம் செய்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக தங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை வைத்துத் தாங்கள் யார் என்பதை நிர்ணயிக்கின்றனர். மற்றவர்கள், அவன் கெட்டிக்காரன் என்று கூறினால் தான் கெட்டிக்காரன் என்பதாகக் கருதி கொள்கிறார்கள். அவன் அத்தனை புத்திசாலி அல்ல என்றால் தன்னிடம் ஏதோ குறை இருப்பதாக நினைத்து சுருங்கிப் போகிறார்கள்.

மகிழ்ச்சியின் முதலான இரகசியம் உங்கள் மீது நீங்கள் காதல் கொள்வதில் இருக்கிறது என்கிறார் ரொபேட் மோர்லி. உண்மையில் தன்னை விரும்பக் கூடிய ஒருவனாலேயே, தன்னை தன் குறைநிறையோடு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவனாலேயே, மற்றவர்களை மகிழ்ச்சியோடு விரும்ப முடியும். அவர்களையும் அவர்களது குறை நிறைகளோடு ஏற்றுக் கொள்ள முடியும். தன்னை நிர்வகிக்கத் தெரிந்த ஒருவனாலேயே தன்னை சுற்றி இருக்கும் எதையும் யாரையும் சரியாக நிர்வகிக்க முடியும். தன்னை ரசித்து தன்னை எப்படியெல்லாம் முன்னேற்றிக் கொள்ளலாம் என அதற்கான வழிகளை சிந்தித்து, எதிலும் தான் விரும்பிய வெற்றியை அடைய முடியும்.

வெனிசுலாவை சேர்ந்த அந்த இளம் பெண்ணிற்கு ஓர் அழகிய கனவு இருந்தது. தான் அனைவருக்கும் பிடித்தமானவளாக இருக்க வேண்டும் என்பது தான் அது. அதுவே தன்னை யார் என்று நிர்ணயிப்பதாக எண்ணுகிறாள். அதனால் ‘goody two shoes’ என்பதாக மற்றவர்களுக்கேற்ப தன்னை சுருக்கியும் நீட்டியும் வளைந்து கொடுத்தும் மற்றவர்களுடைய கருத்தை வைத்து தான் யார் என்பதான தன் கருத்தை மாற்றிக் கொள்பவளாக வலம் வருகிறாள்.




இந்த சூழலில் அவளை விரும்புவதாகக் கூறும் ஓர் இளைஞனை அவளுக்கும் பிடித்துப் போக இருவரும் சந்தோஷமாகச் சுற்றி வருகின்றனர். தன்னை ஒருவன் விரும்புகிறான் என்று அறிந்ததும் தான் மிகவும் விரும்பப்படக் கூடியவள் என்று நினைத்து மிக்க மகிழ்ச்சி அடைகிறாள். தன் மதிப்பும் மரியாதையும் மகிழ்ச்சியும் அவன் காதலிலேயே இருக்கிறது என உருகிப் போகிறாள். அந்தக் காதல் அவளை ஒரு தேவதையாக அவள் மனதில் உலா வரச் செய்கிறது. அவன் மீது அதீத அன்பை பொழிகிறாள். எல்லாம் மகிழ்ச்சியாகத் தான் போய்க் கொண்டிருந்தது. திடீரென ஒரு நாள் அவள் காதலன் எந்தக் காரணமும் சொல்லாமல் அவளை நிராகரிக்கும்வரை.



பிறரது கருத்துக்களை வைத்தே தன்னை மதிப்பிட்டுக் கொண்டிருந்தவளுக்கு தன்னை விரும்பிய ஒருவன் இப்போது விலகி விட்டான் என்றதும் தன்னை யாருக்கும் பிடிக்காது என்று எண்ணி தனக்குள் சுருண்டு விடுகிறாள்.

தான் மற்றவர்களால் விரும்பப்பட வேண்டும் என்பதற்காக தனக்கென ஒரு கருத்தை வைத்துக் கொள்ளாமல் இருந்ததற்கு பதிலாக அவள் தன்னை விரும்பி, அவள் அவளாகவே இருந்து கொண்டு பிறரால் நேசிக்கப் படக்கூடியவளாக இருக்க வேண்டும் என்று அவள் உறுதியாக நினைத்திருந்தால் அவள் ஆழ்மனம் அதற்கான வழிகளையும், சூழல்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும். அது அவளுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும், அவளுக்காக மற்றவர்கள் அவளை விரும்பக் கூடியதாகவும் அமைந்திருக்கும்.

ஆனால் அத்தனை மகிழ்ச்சியும் பிறர் தருவதாகவே நினைத்ததால் ஒரு காதல் தோல்வி அவளுக்கு மிகப் பெரும் சுமையைத் தருகிறது. அதே நேரம் அவளது சகோதரி எப்போதும் எந்தக் கவலையும் இன்றி இருப்பதைப் பார்க்கும்போது, அவளுடைய மகிழ்ச்சி என்பது யாரோ ஒருவரையோ ஏதோ ஒன்றையோ சார்ந்து இல்லை, அவளது மகிழ்ச்சி அவள் நேர்மறை எண்ணங்களிலும் தன்னம்பிக்கையிலும் இருந்து ஏற்படுகிறது என்பதை உணர்கிறாள். அதேபோல் தனக்கான அங்கீகாரமும் மகிழ்ச்சியும் தன்னிடம் இருந்துதான் வர வேண்டும் என்பதையும் அந்தக் கணத்தில் அவள் புரிந்து கொள்கிறாள். இந்த பிரச்சினைகளிலிருந்து மீண்டு வர வேண்டுமென திடமாகவிருந்து மீண்டு வரும்போதுதான் அவளுக்கு தன்னுடைய மனஉறுதியும், மகிழ்ச்சியும், தன் திறமையும், தன் வாழ்க்கையின் அர்த்தமும், தான் ‘யார்’ என்பதும் பிடிபடுகிறது.

பொதுவாக கண்ணுக்கு முன்னால் இதில் தான் மகிழ்ச்சி இருக்கிறது என்று ஏதேனும் ஒன்றைத் தொடர்ந்தீர்கள் என்றால் அந்த ஒன்று எப்போதுமே கானல் நீராக கண்ணா மூச்சி விளையாடக் கூடியதாகவே இருக்கும்.

உண்மையில் மகிழ்ச்சி என்பது உங்களுக்கு நீங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டியது. உங்களிடமிருந்து வர வேண்டியது. தவிர, உண்மையில் உங்களை நீங்கள் எப்படி அமைத்துக் கொள்கிறீர்கள் என்பதிலேயே இந்த பிரபஞ்சத்தை பற்றிய உங்கள் பார்வையும் இந்த பிரபஞ்சத்திற்கான உங்கள் சேவையும் இருக்கிறது.

ஒரு சிறு குழந்தையின் உடல் வளர்ச்சி இயல்பாக உயரமாக, பருமனாக, திடமாக வளர்வதைப்போல் ஒருவனின் உணர்ச்சி வசப்பட்ட வளர்ச்சியும், முன்னேற்றமும் தானாக நடக்கக் கூடியது என பலரும் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் அது உங்களை நீங்கள் எப்படி தன்னம்பிக்கையோடு உருவாக்கிக் கொள்கிறீர்கள் என்பதில் இருக்கிறது.

உங்கள் நெருங்கிய நட்புடன் எவ்வளவு நெருக்கமாக பழகுகிறீர்களோ அந்த அளவு அவரைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள். அதைப்போல உங்கள் நேரத்தையும் சக்தியையும் உங்களைப்பற்றி அதிகமாக தெரிந்துகொள்ள பயன்படுத்தும் போது, நீங்கள் உங்களிடம் அதிகமாக நெருக்கமாகும்போது உங்கள் குறைநிறை தெரிந்து அதை சரி செய்து உங்களை நீங்கள் முன்னேற்றிக் கொள் வீர்கள். சுய அலசலும் சுய முன்னேற்றமும் சுய நட்புமே ஒருவன் தனக்கு கொடுக்கும் சிறந்த பரிசாக இருக்க முடியும்.

தன்னை முன்னிறுத்த நினைக்கும்போது பலருக்கும் வரும் தடங்கல் அது சுயநலமாகி விடுமோ என்பது தான். நான் என்னைக் கவனிப்பதே இல்லை எனக்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை என்பதையே தியாகமென்றும் சிறந்தது என்றும் கேட்டுக் கேட்டு வளர்ந்ததனால் உங்களையறியாமல் உங்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்த உடனேயே அது சுயநலமோ என உங்கள் மனம் இயல்பாக நினைத்து மறுகும். விமானம் புறப்படுமுன் பாதுகாப்பு விடயங்களை அறிவிக்கும்போது ‘உங்களுக்கு நீங்கள் உதவி விட்டு பிறருக்கு உதவுங்கள் என்று சொல்வதைக் கவனியுங்கள். உண்மையில் தன்னை முன்னிறுத்தி முன்னேற்றிக் கொள்ளும் ஒருவனாலேயே நிச்சயம் திடத்தோடும் வளத்தோடும் பிறருக்கு உதவ முடியும். தன்னை ஒரு முன் மாதிரியாக பலரின் முன்னேற்றதிற்கு முன் நிறுத்தவும் முடியும்.

இதில் முக்கியமானது என்னவென்றால் உங்களை நீங்களே விரும்பி முன்னேற்றிக் கொள்ளும்போது நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று மற்றவர்கள் சொல்கின்றனரோ அப்படி இல்லாமல் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படி உங்களை நீங்களே சிறந்த முறையில் உருவாக்கிக் கொள்ள முடியும். அந்த ‘நீங்கள்’ உங்கள் சுய பிரதிபலிப்பாக போலி அற்றதாக இருக்கும். அது நீங்கள் விரும்பிய அனைத்தையும் அனைவரையும் கவர்ந்திழுக்கும். மகிழ்ச்சி நிறையும்.

35 ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**SALEM & ROSSLAND (AJAX)**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop, school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.858.4274**

**MORNINGSIDE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. 1parking. Close to university, TTC, School & all facilities. family preferred. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.656.9050**

**MARKHAM & PAINTEDPOST**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. 4 male students each $500 rent including utilities. Avail. immediately.
**Contact - 647.785.9979**

**HARWOOD & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. 1 Parking. Close to HWY 401, Bus stop, Go Station & all facilities. Avail. May 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.526.5059**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. full wash room & kitchen. Couple /female students preferred. Close to all facilities. Avail. immediately.
**437.236.8223/416.519.1862**

**MARKHAM & STEELES**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance & Parking. Rent + 30% utilities. Working woman Preferred. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.717.2030**

**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. en trance & 1 Parking. Close to TTC & Food basic. No smoking. Avail. April 16, 2025. Please leave a msg.
தொடர்புகளுக்கு: **647.295.4543**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt & 1 Bedroom bsmt for rent. 1 Parking. Close to Bus stop, School & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.979.2337**

**PHARMACY & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to Parkway mall. 2 Min. to Hwy 401. Avail. immediately.
**647.718.9653/647.625.7563**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. 1 parking. Close to bus stop, Costco, & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.236.6437**

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Avail. immediately.
**647.621.4309 / 437.882.0377**

**BRIMLEY & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. No pets & no Smoking. Close to bus stop & all Facilities. Avail. immediately.
**416.335.3460 /647.642.2323**

**MIDLAND & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. en trance & 1 parking. Close to TTC, school, shopping center & Hunding wood Dr.. Avail.May 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.500.2735**

**LAWRENCE & PORT UNION**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Centanniel college, Scar. campus. & all facilities. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.406.2435**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Large living area. Close to bus stop & all facilities. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.269.7232**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to university, TTC & all facilities. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு:**416.688.8364**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to bus stop, School & all facilities. Avail. immediately.
**647.656.6214/647.588.6214**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & CHURCH (AJAX)**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Rent - $1,650. Nearby bus stop & all facilities. Avail. immediately.
**416.425.3713/647.464.9464**

**DENISON & FEATHERSTONE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.965.0754**

**SALEM & ROSSLAND (AJAX)**
2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to bus stop, HWY 401/412 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close to TTC & shopping center. Family preferred. No pets. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.278.9511**

**EGLINTON & BRIMLEY**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to Eraa supermarket & Kennedy station. Avail. immediately.
**416.930.4577/647.616.5440**

**MARKHAM & DENISON**
3 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
**437.995.8245/647.202.8933**

**STAINES & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to bus stop & all facilities. Family/couple preferred. Avail. immediately.
**647.780.8978/647.331.8978**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom walkout bsmt for rent. 1 Parking & laundry. walking distance to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.0339**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. No Parking. Avail. April 01, 2025.
**647.773.6670/ 647.609.5590**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC subway & stores. No laundry. 1 car parking. Avail. immediately.
**Contact: 416.371.8101**

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.8086**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & BRIMORTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to STC & school. 3 minutes walk from bus stop. Couples/ small family preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.919.8441**

## BASEMENT FOR RENT

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom bsmt with kitchen for rent for two people. Close to all facilities. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.998.3535**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to all facilities. Avail immediately.
**647.858.2290/647.534.9897**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms & 1 washrooms bsmt. Apt. for rent.
**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
2 Bedrooms & 2 washrooms bsmt Apt. for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & 16TH AVENUE**
1 Large Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. No smoking & no pets. Utilities included. Couple preferred.
**Please Call after 5:00 Pm:**
**416.707.2800**
If no answer please leave voice mail

Vlambaram - March 15, 2025.qxp_Vlambaram-Front 2025-03-16 5:06 PM Page 13



## ROOM FOR RENT

**MAJOR MACKENZIE & DUFFERIN -** 1 furnished room for rent in a main floor. Shared wash room with 1 person. Close to mall & transportation. Female preferred.
தொடர்புகளுக்கு: **416.970.4720**

**MARKHAM & ELLESMERE**
Rooms available for rent in main floor. Parking. Close to bus stop & all facilities. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.7426**

**MIDDLEFIELD & FINCH**
1 Room for rent in a 2 bedroom bsmt. Sep. entrance & laundry. No parking. Working male preferred. Avail. immediately.
**416.502.3048 /416.409.5286**

**ELLESMERE & ORTON PARK.**
Room for rent in bsmt with sep. entrance .Utilities included. 5 Min. walk to bus stop. Male only. Avail. immediately.
**647.928.0667/416.701.0667**

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom for rent in a detached house main floor. 1 Parking. Close to bus stop, Centanniel college & Scar. campus.
**647.580.6205/647.765.0071**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance & no parking. No pets & No smoking. Working people/ student preferred.
தொடர்புகளுக்கு: **647.855.5122**

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent in upstairs. Sep. washroom. Female preferred. Close to TTC, Toronto university & Pan Am centre. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**MARKHAM & EGLINTON**
1 Master bedroom with attached washroom for rent in a condo.. Close to all facilities. Avail. April 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.716.2718**

**FINCH & NEILSON**
1 Bedroom for rent. Female preferred. Wifi included. Close to eraa supermarket & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.1971**

## ROOM FOR RENT

**VICTORIA PARK & LAWRENCE**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Ladies only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom for rent in a house. Female only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.0599**

**NEILSON & TAPSCOTT**
1 Bedroom for rent in a 2 bedrooms Condo. Ladies only. Infront of Malvern mall.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.5534**

**NEILSON & FINCH**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.455.0905**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Male only. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.859.4043**

**SCAR. GOLF CLUB &ELLESMERE**
1 Bedroom for rent in the Main floor. Female students /வயோதிபர் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.739.5993**

**9TH LINE & 14TH AVENUE**
Room for rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities. Avail. immediately.
**416.648.1987 / 416.669.3549**

**KINGSTON & LAWRENCE**
1 Bedroom for rent in 2 bedroom bsmt. வயோதிபர் விரும்பத்தக்கது. பஸ் வசதி மற்றும் சாப்பாட்டு வசதி உண்டு. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.371.9066**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a Condo. Female student preferred. Sep. washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.953.2597**

**MORNINGSIDE & SEWELLS**
1 Shared room for rent in upstairs. parking. 131 bus stop infront of the house. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.8791**

## ROOM FOR RENT

**WESTNEY & ROSSLAND(AJAX)**
1 Bedroom in upstairs. Ladies only. No parking. Close to grocery store, Mall & all facilities. Avail. immediately.
**647.425.9798/250.613.8389**

**SCAR.GOLF CLUB &ELLESMERE**
2 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Female preferred. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent in a house. Sep. washroom, sep. entrance & shared kitchen. (1 person) Couple/2person preferred. Avail. immediately.
**647.862.6590 /647.886.1789**

**MARKHAM & LAWRENCE**
